**உரித்துக் காப்புறுதி நிதியம் - 2015**

-----------------------------------------------------

உரித்துக் காப்புறுதி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1998 இன் 21 ஆம் இலக்க உரித்து பதிவுசெய்தல் அதிகாரச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரால் விடுவிக்கப்பட்ட 2009 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் விதிக்கப்பட்ட கட்டளைகளின் 41 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

உரித்துக் காப்புறுதி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| 2009 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி | |
| (அ) 11 ஆம் பிரிவு | வருடாந்த கணக்காய்வு அறிக்கையுடன் வருடாந்த நிர்வாக அறிக்கை வெளியிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டு முதல் இது வரையிலும் வருடாந்த நிர்வாக அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 15(1) ஆம் பிரிவு | ஆகக் குறைந்தது அரையாண்டு ரீதியில் சபை கூட்டப்பட வேண்டியிருந்ததுடன் சனவரி மாதத்தின் போது பொதுக் கூட்டம் நடாத்த வேண்டும். எவ்வாறாயினும், நிதியம் ஆரம்பிக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆண்டிற்கு ஒரு தடவை மாத்திரம் சபை கூடியிருந்ததுடன் எந்த வருடமொன்றிலும் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 7,269,267 மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 5,284,088 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின நிதி விளைவுகளில் ரூபா 1,985,179 ஆன அதிகரிப்பு காணப்பட்டது. உரித்து பதிவுசெய்தல் வருமானமானது ரூபா 1,799,086 ஆலும், முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 180,333 ஆலும் உயர்ந்திருந்தமை இவ் அதிகரிப்புக்கு முக்கியமான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 05 வருடங்களினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது நிதியம் ஆரம்பிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 800,515 தொகையான மொத்த வருமானம் மீளாய்வாண்டு வரையில் ரூபா 7,583,400 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2009 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் iii ஆவது பகுதியில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் நோக்கம், காணியொன்றின் உரித்து தொடர்பாக மோசடியான அல்லது பிழையொன்றுடன் உரித்தை பதிவு செய்தல் தொடர்பாக ஏற்படுகின்ற இழப்பு முழுவதற்குமாக இழப்பீடு செலுத்துவதாக இருந்த போதிலும், அது தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித முழுமையான நட்டஈடும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

2009 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் உரித்து பதிவாளர் அலுவலகத்திலிருந்து சேகரிக்கப்படுகின்ற வருமானம் தொடர்பாக இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அறிக்கைகளை உரிய பிரகாரம் பெற்றுக் கொண்டு உரித்து வருமானம் தொடர்பான பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. அதனால் உரித்து பதிவாளர் அலுவலகத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கும் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட வருமானத்திற்குமிடையே ஒப்பீடொன்றைச் செய்ய முடியாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

நிதியத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் திருத்தப்பட்ட பாதீட்டிற்கு இணங்க அது திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 20 சதவீத முரண்களும், பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 25 சதவீத முரண்களும் காணப்பட்டன. அதனால் நிதியத்தின் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பதிவாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன், செயலாற்றல் அறிக்கை தயாரித்து செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்வது தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.